பிரஸார் பாரதி
அகில இந்தியவானொலி, சென்னை-4

02 02 2023 12 40
வியாழக்கிழமை நண்பகல்

தலைப்புச் செய்திகள்

1. நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் எதிர்க்கட்சிகளின் அமளிகாரணமாகபிற்பகல் வரைஒத்திவைக்கப்பட்டன.

2. இந்தியாவின் பாரம்பரியத்தைஉலகுக்குஎடுத்துரைக்க ஜி-20 தலைமைப் பொறுப்பு வாய்ப்புகளைஅளித்துள்ளதாகமத்தியஅமைச்சர் திருசர்பானந்தசோனாவால் தெரிவித்துள்ளார்.

3. சென்னையில் நடைபெற்றுவரும் ஜி-20 கல்விபணிக்குழுக் கூட்டத்தில் இரண்டாவதுநாளாக இன்றுவிவாதங்கள் தொடர்ந்துநடைபெற்றுவருகின்றன.

4. வங்கக் கடலில் நிலைகொண்டிருந்தகாற்றழுத்ததாழ்வுமண்டலம் இன்று இலங்கையின் கிழக்குகடற்கரைப் பகுதியில் கரையைகடந்தது.

5. முத்தரப்பு மகளிர் ட்வெண்ட்டிட்வெண்ட்டிகிரிக்கெட் இறுதிப் போட்டியில் இந்தியா இன்றுதென்னாப்பிரிக்காவைஎதிர்கொள்கிறது.

----- *இனிவிரிவானசெய்திகள்* ---

**[]<<<>>>[]**

நாடாளுமன்றம் இன்றுகாலைகூடியதும், எதிர்க்கட்சிகளின் அமளிகாரணமாக இரு அவைகளும் பிற்பகல் வரைஒத்திவைக்கப்பட்டன.

மக்களவை இன்றுகாலைகூடியதும் அதானிகுழுமவிவகாரம் உள்ளிட்டபிரச்சினைகளைஎதிர்க்கட்சிஉறுப்பினர்கள் எழுப்பி, அதன் மீதுஉடனடியாகவிவாதம் நடத்தவேண்டுமெனவலியுறுத்தினர்.

காங்கிரஸ், திரிணமூல் காங்கிரஸ், திமுகஉள்ளிட்டகட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் அவையின் மையப்பகுதிக்குச் சென்றுஅமளியில் ஈடுபட்டனர்.

தங்களது இருக்கைகளுக்குச் செல்லுமாறுஅவைத் தலைவர் திருஓம் பிர்லாபலமுறைகேட்டுக் கொண்டார்.

எனினும் எதிர்க்கட்சிஉறுப்பினர்கள் தொடர்ந்துஅமளியில் ஈடுபட்டதால் அவைநடவடிக்கைகள் பிற்பகல் இரண்டுமணிவரைஒத்திவைக்கப்படுவதாகதிருஓம் பிர்லாஅறிவித்தார்.

இதேபோல் மாநிலங்களவையிலும் எதிர்க்கட்சிஉறுப்பினர்கள் எல் ஐ சிமுதலீடு, பொதுத்துறை வங்கிகள் மற்றும் நிதிநிறுவனங்களின் சந்தைமதிப்பு குறைவு உள்ளிட்டபிரச்சினைகளைஎழுப்பிஅமளியில் ஈடுபட்டனர்.

இது தொடர்பானஒத்திவைப்பு தீர்மானத்தையும் அவர்கள் அளித்திருந்தனர்.

இந்தஒத்திவைப்பு தீர்மானத்தைஅவைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர் ஏற்கமறுத்ததைஅடுத்து, காங்கிரஸ், திரிணமூல் காங்கிரஸ், திமுக, ஆம் ஆத்மி, சமாஜ்வாதிமற்றும் இடதுசாரிகட்சிகளின் உறுப்பினர்கள் தொடர்ந்துஅமளியில் ஈடுபட்டதால் அவைபிற்பகல் இரண்டுமணிவரைஒத்திவைக்கப்பட்டது.

[]<<<>>>[]

தூய்மையானமற்றும் பசுமையான சமூகத்தைஉருவாக்கஅனைவரும் இணைந்துசெயலாற்றவேண்டுமென்றுமத்தியகப்பல் மற்றும் ஆயூஷ்துறைஅமைச்சர் திருசர்பானந்தசோனாவால் தெரிவித்துள்ளார்.

குவாஹாத்தில் நடைபெறும் ஜி-20 நீடித்தநிதிபணிக்குழுக் கூட்டத்தை இன்றுகாலைதொடங்கிவைத்துபேசியஅவர், கார்பன் வெளியேற்றத்தைகுறைக்கமேலும் தீவிரமாகசெயல்படவேண்டுமென்றுகேட்டுக் கொண்டார்.

தேசியவளர்ச்சிக்கானநிலையானநடைமுறைகளை இந்தியாஏற்றுசெயல்பட்டுவருவதாகஅவர் கூறினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசியஅமைச்சர், இந்தியாவின் பாரம்பரியத்தைஉலகுக்குஎடுத்துரைக்க ஜி-20 தலைமைப் பொறுப்பு வாய்ப்புகளைஅளித்துள்ளதாகக் கூறினார்.

பருவநிலைமாற்றம், நாம் எதிர்கொள்ளும் முக்கியமானபிரச்சினைஎன்றுகூறியஅவர், இந்தகூட்டத்தில் அதற்குதீர்வு காண்பதற்கானவழிகள் குறிதது ஆராயப்படும் என்றுதெரிவித்தார்.

இந்த இரண்டுநாள் கூட்டத்தில் பருவநிலை செயல் திட்டத்திற்கானநிலையானநிதிஅளித்தல் மற்றும் வளர்ச்சியில் சமநிலைஉள்ளிட்டவைகுறித்துவிவாதிக்கப்படுவதாகதிருசர்பானந்தசோனாவால் குறிப்பிட்டார்.

இந்தகூட்டத்தில் ஜி-20 நாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் விருந்தினர் நாடுகளின் பிரதிநிதிகள் நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றுள்ளனர்.

[]<<<>>>[]

சென்னையில் நடைபெற்றுவரும்அ ஜி-20 கல்விபணிக்குழுக் கூட்டத்தின் இரண்டாவதுநாளான இன்றுவிவாதங்கள் தொடர்ந்துநடைபெற்றுவருகின்றன.

திறன் மேம்பாடு, வாழ்நாள் முழுவதும் கல்வியைதொடருதல், ஆய்வுகளுக்குமுக்கியத்துவம் அளித்தல், புதுமைகளைஊக்கவித்தல், உள்ளிட்டவைதொடர்பாககாலைஅமர்வில் விவாதங்கள் நடைபெற்றன.

பிற்பகல் அமர்வில் கல்விதொடர்பானஅறிக்கையைதயாரிப்பதுதொடர்பாகவும், உறுப்பு நாடுகள் மற்றும் விருந்தினர் நாடுகள் தெரிவிக்கும் அம்சங்கள் தொடர்பாகவும் ஆலோசனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பங்ளாதேஷ், எகிப்து, நெதர்லாந்து, மொரீஷியஸ் ஆகியவை இக்கூட்டத்தில் விருந்தினர் நாடுகளாக பங்கேற்றுள்ளன.

முன்னதாக இன்றுகாலைகல்வியில் பல்வேறுஅம்சங்கள் தொடர்பாகஉறுப்பு நாடுகளுக்கு இடையே இருதரப்பு ஒப்பந்தங்களைஏற்படுத்துவதுதொடர்பானஆலோசனைகளும் மேற்கொள்ளப்பட்டதாகஎமதுசெய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்தகூட்டத்தில் பங்கேற்றுள்ளபிரிட்டன் பிரதிநிதி ஜனகபுஷ்பநாதன், ஜி-20 நாடுகள் எதிர்கொள்ளும் பொதுவானசவால்களுக்குதீர்வு காண்பதுகுறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்படுவதாகஎமதுசெய்தியாளரிடம் தெரிவித்தார்.,

*<u>( சவுண்ட்பைட் - ஜனகபுஷ்பநாதன் ) -45-- செகண்ட்</u>*

[]<<<>>>[]

உலகஈர நிலங்கள் தினம் இன்றுகடைபிடிக்கப்படுகிறது.

ஈரநிலம் பூமியின் சுற்றுச் சூழலுக்குஆற்றும் முக்கியபங்குகுறித்துமக்களிடையேவிழிப்புணர்வு ஏற்படுத்தவும்,ஈர நிலத்தின் முக்கியத்துவம் குறித்துமக்கள் அறிந்துகொள்ளவும் இந்ததினம் கடைபிடிக்கப்படுகிறது.

1971ஆம் ஆண்டு, இதேநாளில் ஈரான் நாட்டின் ராம்சர் நகரில் உலகளாவியஈர நிலத்தைபாதுகாக்கும் ராம்சர் ஒப்பந்தம் கையெழுத்தானது.

அதைக் குறிக்கும் வகையில் ஒவ்வொருஆண்டும் பிப்ரவரிஇரண்டாம் நாள் சர்வதேசஈரநிலதினம் கடைபிடிக்கப்பட்டுவருகிறது.

இந்நாளையொட்டிமத்தியசுற்றுச்சூழல் துறைஅமைச்சர் திரு பூபேந்தர் யாதவ் விடுத்துள்ளசெய்தியில், பிரதமர் திருநரேந்திரமோடிதலைமையிலானமத்தியஅரசுநாட்டில் ஈர நிலங்களின் பரப்பளவு விரிவுபடுத்தநடவடிக்கைஎடுத்துவருவதாகக் கூறியுள்ளார்.

உலகின் பலபகுதிகளில் ஈரநிலங்கள் குறைந்துவரும் நிலையில், இந்தியாவில் அதுபாதுகாக்கப்படுவதாகதெரிவித்துள்ளார்.

ஈரநிலங்களைப் பாதுகாப்பதற்காகஅம்ரித் தரோஹர் என்றசிறப்புத் திட்டம் மத்தியபட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளதைஅவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

**[]<<<>>>[]**

தமிழகமுதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்றுவேலூர் மாவட்டம் சத்துவாச்சேரிபகுதியில் ‘களஆய்வில் முதலமைச்சர்’என்றதிட்டத்தின் கீழ் பல்வேறுபணிகளைஆய்வு செய்தார்.

அப்பகுதியில் கட்டப்பட்டுவரும் ஆரம்பசுகாதாரநிலையத்தைஆய்வு செய்தஅவர், அருகில் உள்ளபள்ளியில் குழந்தைகளுக்குவழங்கப்படும் காலைசிற்றுண்டிதயார் செய்யும் உணவு கூடத்தையும் பார்வையிட்டுஉணவின் தரம் குறித்துசிறார்களிடம் கேட்டறிந்தார்.

பின்னர் அலமேலு மங்காபுரத்தில் உள்ளஅரசுஆதிதிராவிடர் நலப்பள்ளியிலும் சென்றுதிரு மு க ஸ்டாலின் ஆய்வு மேற்கொண்டார்.

**[]<<<>>>[]**

நாடாளுமன்றத்தில் நேற்றுதாக்கல் செய்யப்பட்டமத்தியபட்ஜெட்டில் வரவேற்கத் தக்கஅம்சங்கள் இடம்பெற்றுள்ளதைகாஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவணிகர் சங்கம் வரவேற்றுள்ளது.

டிஜிட்டல் பணபரிவர்த்தனையைசுலபமாகமேற்கொள்ளபட்ஜெட்டில் வழிவகைசெய்யப்பட்டுள்ளதைவரவேற்பதாகஅதன் தலைவர் எமதுசெய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(சவுண்ட்பைட்-வணிகர்-கோகுலகிருஷ்ணன்)--45- செகண்ட்*

[]<<<>>>[]

வங்கக் கடலில் நிலைகொண்டிருந்தகாற்றழுத்ததாழ்வுமண்டலம் இன்றுஅதிகாலை இலங்கையின் கிழக்குகடற்கரைப் பகுதியில் கரையைகடந்தது.

இதன் காரணமாகஅந்நாட்டின் கிழக்குகடலோரப் பகுதிகளில் பலத்தகாற்றுடன் மழைபெய்துவருவதாகஎமதுசெய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனிடையே இந்தகாற்றழுத்ததாழ்வுமண்டலம் காரணமாகதமிழகத்தின் கடலோரமாவட்டங்களின் ஒருசிலபகுதிகளில் பரவலாகமழைபெய்தது.

கன்னியாகுமரி, மயிலாடுதுறை, திருவாரூர், நாகப்பட்டினம், அரியலூர் உள்ளிட்டமாவட்டங்களில் விட்டுவிட்டுமழைபெய்துவருவதாகஎமதுசெய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

நாகைமாவட்டத்தில் மழைகாரணமாகசம்பாஅறுவடைப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகஎமதுசெய்தியாளர் கூறுகிறார்.

*( வாய்ஸ்பைட் - செ ஜெ ) -30-- செகண்ட்*

[]<<<>>>[]

முத்தரப்பு மகளிர் ட்வெண்ட்டிட்வெண்ட்டிகிரிக்கெட் இறுதிப் போட்டியில் இந்தியா இன்றுதென்னாப்பிரிக்காவைஎதிர்கொள்கிறது.

லண்டனில் நடைபெறஉள்ள இந்தப் போட்டி இன்றுமாலைமணி 6 -30-க்கு தொடங்குகிறது.

[]<<<>>>[]

ஐ எஸ் எல் கால்பந்துப் போட்டியில் இன்றுநடைபெறவுள்ளஆட்டத்தில் சென்னைஅணி— ஒடிஸாஅணியைஎதிர்கொள்கிறது.

சென்னைநேருவிளையாட்டரங்கில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

சென்னை இப்போட்டியில் வெற்றிபெற்றால் ப்ளேஆஃப் சுற்றுக்குமுன்னேறும் வாய்ப்பு ஏற்படும்.

*End of News*